# FIRST INFORMATION REPORT

முதல் தகவல் அறிக்கை

Under Section 173 BNSS ~~(Under Section 154 Cr.P.C.)~~

~~(கு.ந.வி.தொ.பிரிவு 154 இன் கீழ்)~~

TAMIL NADU POLICE

INTEGRATED INVESTIGATION FORM-I

C 8040899

1. District மாவட்டம் : The Nilgiris PS: காவல்நிலையம் V & AC Year: ஆண்டு 2024 FIR No.: மு.த.அ. எண் 8/24 Date: நாள் 10.11.2024

2. (i) Act சட்டம்: The Prevention of Corruption Sections பிரிவுகள்: 7

(ii) Act சட்டம்: Act, 1988 as amended by the Sections பிரிவுகள்:

(iii) Act சட்டம்: Prevention of Corruption (Amendment) Sections பிரிவுகள்:

(iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் : Act 2018

3. (a) Occurrence of Offence Day : குற்ற நிகழ்வு நாள் Date from : நாள் முதல் Date to : நாள் வரை 09.11.2024

Time Period : நேர அளவு Time from : நேரம் முதல் Time to : நேரம் வரை Prior to 19.45 hrs.

(b) Information Received at PS. Date : காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் 10.11.2024 Time நேரம் : 14.30 hrs.

(c) General Diary Reference : Entry No(s) பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண் 10.11.2024 Time நேரம் : 14.30 hrs.

4. Type of Information : Written/ Oral : தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக Tamil Typed complaint.

5. Place of Occurrence (a) Direction and Distance from PS: குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு தூரமும், எத்திசையும் Commissioner Quarters to Doddabetta Junction at about 10kms East.

Beat Number : முறைக் காவல் எண் (b) Address : முகவரி

(c) In case outside limit of this Police Station, then the Name of P.S : District :

இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர் மாவட்டம்

6. Complainant /Informant (a) Name : குற்றமுறையீட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர் K. Srinivasan (b) Father's/ Husband's Name : தந்தை / கணவர் பெயர்

(c) Date / Year of Birth : நாள் / பிறந்த ஆண்டு (d) Nationality : நாட்டினம் Indian (e) Passport No. : வெளிநாட்டு கடவுச்சீட்டு எண்

Date of Issue : வழங்கப்பட்ட நாள் Place of Issue : வழங்கப்பட்ட இடம்

(f) Occupation : தொழில் Spl Tahsildar Elections Collectorate, the Nilgiris (g) Address : முகவரி District Special Inspection Cell Officer

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary)

தெரிந்த / ஐயப்பாட்டிற்குறிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள் (தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்)

Tr. A. Jahangir Basha, Commissioner, Udhagamandalam Municipality

8. Reasons for delay in reporting by the complainant / Informant:

குற்றமுறையீட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்

– No delay –

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

10. Total value of properties stolen / involved :
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு

11. Inquest Report / Un-natural death Case No. if any:
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால்

12. FIR Contents (Attach separate sheet, if required) :
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

Separate Sheet Enclosed.

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed ...................... Rank ...................... to take up the Investigation / Refused Investigation / transferred to PS..............................................on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் .............................. பதவி ...................... நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு ............................................. காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
மு.த.அ. குற்றமுறையிட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

K. [signature] 10/11/24

14. Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் /
பெருவிரல் இரேகைப் பதிவு

[signature] 10/11/2024
Signature of the Officer in-charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்

15. Date & Time of despatch to the court: 10.11.2024
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும் at
17:10 hrs.

Name: பெயர் P. PARIMALADEVI
Rank: நிலை ......................No. எண் ..........
Inspr. of Police
V & AC The Nilgiris

<u>சமர்ப்பிக்கப்படுகிறது.</u>

<u>நீலகிரி ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு குற்ற எண்.8/2024/AC/NI, u/s 7 of the Prevention of Corruption Act, 1988 as amended by the Prevention of Corruption (Amendment) Act, 2018 வழக்கின் முதல் தகவல் அறிக்கையின் தொடர்ச்சி:-</u>

இன்று 10.11.2024-ம் தேதி மதியம் சுமார் 14.30 மணிக்கு நீலகிரி, ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு, காவல் ஆய்வாளர், P.பரிமளாதேவி ஆகிய நான் அலுவலகத்தில் இருக்கும்போது நீலகிரி மாவட்டம், உதகமண்டலம், மாவட்ட ஆட்சியர் அலுவலகம், தனி வட்டாட்சியர் (தேர்தல்கள்), பொறுப்பு மாவட்ட சிறப்பு ஆய்வுக்குழு அலுவலர், திரு.K.சீனிவாசன் அவர்கள் நிலையம் ஆஜராகி கொடுத்த கணினி மூலம் தட்டச்சு செய்யப்பட்ட புகாரினை பெற்று நீலகிரி ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு குற்ற எண்.8/2024, u/s 7 of the Prevention of Corruption Act, 1988 as amended by the Prevention of Corruption (Amendment) Act, 2018 கீழ் வழக்கு பதிவு செய்தேன். அந்த புகார் மனு விபரம் பின்வருமாறு: அனுப்புநர் திரு.K.சீனிவாசன், தனி வட்டாட்சியர் (தேர்தல்கள்) மாவட்ட சிறப்பு ஆய்வுக்குழு அலுவலர், மாவட்ட ஆட்சியர் அலுவலகம், நீலகிரி மாவட்டம். பெறுநர் காவல் ஆய்வாளர், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு, நீலகிரி. அம்மையீர், பொருள்: நீலகிரி மாவட்டம் - உதகமண்டலம் நகராட்சி அலுவலகத்தில் 09.11.2024-ம் தேதி 19.45 மணிமுதல் 10.11.2024-ம் தேதி 13.00 மணிவரை திடீர் ஆய்வு மேற்கொள்ளப்பட்டது - நடவடிக்கை எடுக்க கோருதல் - தொடர்பாக. நீலகிரி மாவட்ட ஆட்சி தலைவர் அவர்களால் 09.11.2024-ம் தேதி சிறப்பு மாவட்ட ஆய்வுக்குழு அலுவலராக நியமிக்கப்பட்டுள்ள மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தின் தனி வட்டாட்சியர் (தேர்தல்கள்) திரு.K.சீனிவாசன் அவர்களுக்கு நீலகிரி மாவட்டம், உதகமண்டலம் நகராட்சி ஆணையாளர் திரு.A.ஜஹாங்கீர் பாஷா அவர்கள் உதகமண்டலம் நகராட்சிக்குட்பட்ட 36 வார்டுகளில் குடியிருப்பு பயன்பாட்டிலிருந்து வணிக பயன்பாட்டிற்கு மாற்ற கட்டிட உரிமையாளர்களிடமிருந்தும், உதகமண்டலம் to குன்னூர் சாலையில் அமைந்துள்ள சுவாதி டிரேடர்ஸ் (சென்னை சில்க்ஸ்) வணிக

பயன்பாட்டிற்கு புதிய வரி நிர்ணயம் செய்வதற்கும் மற்றும் உதகமண்டலம் சேரிங்கிராஸ் முதல் கேசினோ சந்திப்பு வரையில் வாகனம் நிறுத்துவதற்கு திரு.ரவிபிரசாத் என்பவருக்கு உத்தரவு வழங்கியதற்காகவும், 09.11.2024-ம் தேதி மாலை அலுவல் நேரத்திற்குப்பின் தனியார் வாகனத்தில் சென்று கையூட்டு பெறப்போவதாக நம்பத்தகுந்த தகவல் கிடைக்கப்பெற்றது. நீலகிரி மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களின் உத்தரவு Pdl.A1.No.30/2024 நாள்:09.11.2024-ன்படி மாவட்ட சிறப்பு ஆய்வுக்குழு அலுவலராக நியமிக்கப்பட்ட நான், நீலகிரி ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு காவல் ஆய்வாளர் திருமதி.P.பரிமளாதேவி மற்றும் காவல் குழுவினருடன் உதமண்டலம் to கோத்தகிரி சாலை தொட்டபெட்டா சந்திப்பில் உதகமண்டலம் நகராட்சி ஆணையாளர் திரு.A.ஜஹாங்கீர் பாஷா அவர்கள் சென்ற TN 54 K 6908 என்ற தனியார் வாகனத்தில் ஆய்வு மேற்கொள்ளப்பட்டது. அந்த திடீர் ஆய்வின்போது நீலகிரி மாவட்ட சிறப்பு ஆய்வுக்குழு அலுவலராகிய நான் மற்றும் நீலகிரி, ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு காவல் ஆய்வாளர் ஆகியோரால் தயார் செய்யப்பட்ட செயல்முறை நடவடிக்கையின் விவரம் பின்வருமாறு. மேற்படி தகவலின் அடிப்படையில் நான், காவல் ஆய்வாளர் மற்றும் காவல் குழுவினர் சகிதம் அனைவரும் இரண்டு வாகனங்களில் உதகமண்டலம் நகராட்சி அலுவலகத்திற்கு அருகில் மாலை சுமார் 17.30 மணிக்கு சென்று உதகமண்டலம் நகராட்சி ஆணையாளர் திரு.A.ஜஹாங்கீர் பாஷா அவர்களை கண்காணித்துக் கொண்டிருந்தபோது, ஆணையாளர் திரு.ஜஹாங்கீர் பாஷா அவர்கள் இரவு சுமார் 19.00 மணிக்கு அரசு வாகன பதிவு எண்.TN 43 K-2197 கொண்ட வெள்ளை நிற Scorpio வாகனத்தில் அலுவலகத்தை விட்டு சென்றார். அவரை பின் தொடர்ந்து நான் மற்றும் காவல் ஆய்வாளர் குழுவினருடன் பின்தொடர்ந்து சென்றபோது அவர் உதகமண்டலம் அரசு மருத்துவ கல்லூரி சாலை வழியாக குல்முகமது சாலையில் உள்ள ஆணையாளர் குடியிருப்பிற்கு சுமார் 19.10 மணிக்கு சென்று தோள் பையுடன் (Shoulder Bag) வாகனத்திலிருந்து இறங்கியபிறகு வாகனத்தை அனுப்பிவிட்டார். அப்போது அங்கு வந்த TN 54 K 6908 என்ற பதிவு எண் கொண்ட Etios காரில் பின் இருக்கையில் ஏறி அமர்ந்துக்கொண்டதும்

வாகனம் கமர்சியல் சாலை நோக்கி சென்றது. அந்த வாகனத்தை பின் தொடர்ந்து சென்றபோது அந்த வாகனம் உதகமண்டலம் கமர்சியல் சாலையில் அமைந்துள்ள Syedi Restaurant அருகில் சுமார் 19.25 மணிக்கு நின்றது. அப்போது நகராட்சி ஆணையாளர் திரு.ஜஹாங்கீர் பாஷா அவர்கள் தோள் பையுடன் இறங்கி Syedi Restaurant-க்குள் சென்று Cash Counter-ல் அமர்ந்திருந்த நபரை சந்தித்து பேசினார். பின்பு அந்த நபர் Cash counter அருகில் இருந்து இரண்டு கவர்களை எடுத்து ஆணையாளரிடம் கொடுத்தார். அதைவாங்கி திரு.ஜஹாங்கீர் பாஷா அவர்கள் தனது தோள் பையில் வைத்துக்கொண்டார். பின்னர் அவர் செல்போனில் பேசிக்கொண்டே அவர் வந்த காரின் அருகில் வந்தபோது, இரு சக்கர வாகனத்தில் அங்கு வந்த நபர்களில் பின் அமர்ந்திருந்தவர் ஒரு இளம் பச்சைநிற அலுவலக கவரை எடுத்து ஆணையாளரிடம் கொடுத்தார். அதனை ஆணையாளர் திரு.ஜஹாங்கீர் பாஷா அவர்கள் வாங்கி தனது தோள் பையில் வைத்துக்கொண்டு காரின் பின் இருக்கையில் ஏறி அமர்ந்தார். அப்போது மாவட்ட சிறப்பு ஆய்வுக்குழு அலுவலர் மற்றும் காவல் ஆய்வாளர், குழுவினருடன் அவரை நெருங்க முயன்றபோது TN 54 K 6908 கார் வேகமாக புறப்பட்டு பழைய மாவட்ட கண்காணிப்பாளர் அலுவலகம் வழியாக கோத்தகிரி நோக்கி சென்றது. அதை பின் தொடர்ந்து சென்றபோது மேல்கோடப்மந்து தாண்டி High Hill Tea கடை அருகில் அந்த வாகனம் நின்றது. அப்போது கடை முன் காத்திருந்த ஒருவர் காரின் இடதுபுற பின்பக்க கதவின் அருகில் வந்து காக்கி நிற கவர் ஒன்றை எடுத்து திரு.ஜஹாங்கீர் பாஷா அவர்களிடம் கொடுத்தார். ஆணையாளர் அதனை காரில் இருந்தவாறே வாங்கிக்கொண்டார். அப்போது TN 54 K 6908 வாகனத்தை சோதனை செய்வதற்காக நான், காவல் ஆய்வாளர், குழுவினருடன் இறங்க முயற்சித்தபோது அந்த கார் புறப்பட்டு கோத்தகிரி சாலையில் வேகமாக சென்றது. அதனால் அந்த வாகனத்தை நிறுத்தி சோதனை செய்ய வேண்டி பின் தொடர்ந்து சென்று தொட்டபெட்டா சந்திப்பிற்கு முன் சுமார் 100 அடி தூரத்தில் TN 54 K 6908 வாகனத்தை முந்திச்சென்று சைகை காட்டி அந்த வாகனம் தொட்டபெட்டா சந்திப்பில் பாதுகாப்பாக நிறுத்தப்பட்டது. நான், காவல் ஆய்வாளர் மற்றும் காவல்

குழுவினருடன் இரவு சுமார் 19.45 மணிக்கு TN 54 K 6908 வாகனத்திற்கு அருகில் சென்று காரில் பின் இருக்கையில் இருந்தவரிடமும், ஓட்டுநர் இருக்கையில் அமர்ந்திருந்தவரிடமும் நான் என்னையும் காவல் ஆய்வாளர் மற்றும் காவல் குழுவினர்களையும் அடையாள அட்டையை காண்பித்து அறிமுகம் செய்து கொண்டு, வாகனத்தை தணிக்கை செய்யவிருப்பதாக நான் தெரிவித்தேன். காரில் பின் இருக்கையில் இருந்தவரிடம் விசாரிக்க தனது பெயர் A.ஜஹாங்கீர் பாஷா என்றும் தான் உதகமண்டலம் நகராட்சியில் 06.08.2024-ம் தேதி முதல் நகராட்சி ஆணையாளராக பணிபுரிந்து வருவதாக சொன்னார். ஓட்டுநரிடம் விசாரிக்க அவர் தனது பெயர் B.ராஜப கவுடா, வயது 52, த/பெ போரே கவுடா என்றும் தான் ஊட்டியிலுள்ள முருகன் டிராவல்ஸில் ஓட்டுநராக இருந்து வேலை செய்து வருவதாக தெரிவித்தார். பின்னர் நான் மற்றும் காவல் ஆய்வாளர் காரில் உள்ள லைட் மற்றும் எங்களுடைய அலைபேசியில் உள்ள டார்ச்சை ஆன் செய்து காரை சோதனை செய்தபோது பின் இருக்கையில் ஆணையாளர் திரு.ஜஹாங்கீர் பாஷா அவர்கள் அருகில் வைத்திருந்த ஐந்து அறைகள் கொண்ட Roshan என்று எழுதப்பட்ட புளூ மற்றும் இளம் காக்கி நிற தோள் பையை சோதனை செய்தபோது அந்த பையில் இளம் பச்சை நிற அலுவலக கவர்களில் காக்கி டேப் ஒட்டியவாறு சுற்றிய கவர்கள் இருந்தது. மேலும் அவர் அருகில் இருக்கையில் இருந்த சாம்பல் நிற துணிப்பையை சோதனையிட்டபோது அதிலும் இளம் பச்சை நிற அலுவலக கவர்கள் இருந்தது. மேலும் காரில் ஆணையாளர் அவர்களின் அருகில் பரிசு பொருட்கள் இருந்தது. ஆணையாளர் அவர்களிடம் விசாரிக்க மேற்படி கவர்களில் பணம் இருப்பதாக தெரிவித்தார். வாகனம் நிறுத்தப்பட்ட இடமானது கோத்தகிரி, தொட்டபெட்டா மற்றும் இடுஹட்டி செல்லும் சாலை சந்திப்பாகும். அந்த சந்திப்பில் போதிய விளக்கு வெளிச்சம் இல்லாததாலும், அங்கு கடும்குளிர் நிலவுவதாலும், இரவு நேரங்களில் வன விலங்குகள் நடமாடும் பகுதியாக இருந்ததாலும், பாதுகாப்பு கருதி நகராட்சி ஆணையாளர் திரு.ஜஹாங்கீர் பாஷா மற்றும் வாகன ஓட்டுநர் திரு.ராஜப கவுடா ஆகியோருடன், காரில் இருந்த ஆணையாளரின் உடைமைகளுடன் TN 54 K 6908 என்ற வாகனத்தில் ஆணையாளரின் வலதுபுறம் காவல்

ஆய்வாளர் மற்றும் இடதுபுறம் நானும் அமர்ந்துக்கொண்டு, உதகமண்டலம் நகராட்சி அலுவலகத்திற்கு இரவு சுமார் 20.20 மணியளவில் அழைத்து சென்றோம். போர்டிகோவில் வாகனத்தை நிறுத்தி நான் ·மற்றும் காவல் ஆய்வாளர், நகராட்சி ஆணையாளர் திரு.ஜஹாங்கீர் பாஷா அவர்களை வாகனத்தைவிட்டு இறங்கச் செய்து, அவர் வசமிருந்த தோள் பை, துணிப்பை மற்றும் பரிசு பொருட்கள் ஆகிய உடைமைகளை எடுத்துக்கொண்டு நகராட்சி ஆணையாளர் அறைக்கு வந்து அவரது இருக்கையில் அமர வைக்கப்பட்டது. அவரது உடைமைகள் அனைத்தும் அவரது மேசையின் மீது காட்சிபடுத்தப்பட்டது. அலுவலகத்தில் இருந்த உதவி பொறியாளர் திரு.சண்முக சுந்தரம், வருவாய் ஆய்வாளர் திரு.காதர் பாட்சா கான், தற்காலிக பணியாளர் திரு.மகேஷ்குமார், இளநிலை உதவியாளர் திரு.சரண் மற்றும் இரவு காப்பாளர் திரு.ஸ்டீபன் ஆகியோர்களிடம் அறிமுகம் செய்துகொண்டு, விவரம் தெரிவித்து விசாரணைக்காக காத்திருக்கும்படி அறிவுறுத்தப்பட்டது. ஆணையாளர் அறையில் வைத்து செயல்முறை நடவடிக்கைகள் சுமார் 20.45 மணிக்கு ஆரம்பிக்கப்பட்டது. பின்னர் ஆணையாளர் திரு.ஜஹாங்கீர் பாஷா அவர்களை சோதனை செய்தபோது அவரது இடதுபுற பேண்ட் பாக்கெட்டில் ரூ.5,550/- இருந்ததை எடுத்து ஆஜர் செய்தார். அதைப்பற்றி அவரிடம் விசாரிக்க தனது செலவிற்கு வைத்துள்ளதாக தெரிவித்ததால், அந்த பணம் அவரிடமே திரும்ப ஒப்படைக்கப்பட்டது. அதனை தொடந்து ஆணையாளரின் Roshan என்று எழுதப்பட்ட புளூ மற்றும் இளம் காக்கி நிற தோள் பையை சோதனையிடப்பட்டது. ஐந்து அறைகள் கொண்ட அந்த பையின் முதல் சிறிய அறையை திறந்து சோதனையிட்டதில் பொருள்கள் எதுவும் இல்லை. பின்னர் இரண்டாவது அறையை திறந்து சோதனையிட்டதில் காக்கி நிற டேப்பால் சுற்றப்பட்ட இரண்டு இளம் பச்சை நிற அலுவலக கவர்கள் இருந்தது. அதில் ஒரு கவரை பிரித்து சோதனை செய்தபோது 500 ரூபாய் தாள்கள் இரண்டு கட்டுகளாக மொத்தம் ரூ.1,00,000/- இருந்தது. மற்றொரு கவரை பிரித்து சோதனை செய்தபோது அதில் மூன்று கட்டுகளாக 500 ரூபாய் தாள்கள் மொத்தம் ரூ.1,29,000/- இருந்தது. மேலும் அதே அறையில் இருந்த ரப்பர் பேண்டால் சுற்றப்பட்ட 40 எண்ணிக்கையில் 500 ரூபாய்

தாள்கள் ரூ.20,000/- இருந்தது. ஆணையாளரிடம் விசாரிக்க உதகமண்டலம் நகராட்சிக்குட்பட்ட 36 வார்டுகளில் குடியிருப்பு பயன்பாட்டிலிருந்து வணிக பயன்பாட்டிற்கு வரி இனத்தை மாற்றிக்கொடுத்ததற்காக உரிமையாளர்கள் கொடுத்த பணம் என்று தெரிவித்ததால், அந்த பணம் மொத்தம் ரூ.2,49,000/- மற்றும் இரண்டு கவர்கள் செயல்முறை நடவடிக்கையில் விசாரணைக்காக கைப்பற்றபட்டது. பின்னர் அந்த பையின் மூன்றாவது அறையை சோதனை செய்தபோது அதனுள் கருப்பு நிற நெகிழி பை இருந்தது. அதில் கைப்பற்றும்படியான பொருட்கள் எதுவும் இல்லை. பின்னர் அந்த பையின் நான்காவது அறையை சோதனை செய்ய அதில் இளம் பச்சை நிற அலுவலக கவரினுள் நான்கு 500 ரூபாய் கட்டுகளாக மொத்தம் ரூ.2,00,000/- இருந்தது. ஆணையாளரிடம் அந்த பணத்தைப்பற்றிகேட்க தீபாவளிக்கு முன்பு சேரிங்கிராஸ் முதல் கேசினோ சந்திப்பு வரை பார்க்கிங் டென்டர் விடப்பட்டதாகவும், டென்டர் எடுத்த திரு.ரவிபிரசாத் என்பவர் கொடுத்ததாக தெரிவித்தார். அந்த பணம் ரூ.2,00,000/- மற்றும் கவர் செயல்முறை நடவடிக்கையில் விசாரணைக்காக கைப்பற்றப்பட்டது. மேலும் சோதனை செய்ததில் அதே அறையில் 500 ரூபாய் தாள்கள் 5 கட்டுகளாக காக்கி நிற கவரில் சுற்றப்பட்டிருந்தது. அதில் மொத்தம் ரூ.2,50,000/- இருந்தது. அந்த பணத்தைப்பற்றி ஆணையாளர் அவர்களிடம் விளக்கம் கேட்க உதகமண்டலம் கமர்ஷியல் சாலையில் பாரதியார் வணிக வளாகம் கடை எண்.1 மற்றும் 2-ல் பாபு சுலைமான் பெயரில் உள்ள Limra Garments துணிக்கடையை ஹோட்டலாக மாற்ற விண்ணப்பிக்க இருப்பதாகவும், அதற்காக திரு.சாகுல் ஹமிது என்கின்ற சிராஜ் என்பவர் கொடுத்த பணம் என்று தெரிவித்தார். அந்த பணம் ரூ.2,50,000/- மற்றும் கவர் செயல்முறை நடவடிக்கையில் விசாரணைக்காக கைப்பற்றபட்டது. மேலும், ஐந்தாவது அறையை சோதனை செய்ய அதில் இருந்த apple நிறுவன IPad Pro மற்றும் YOUVA என்று குறிப்பிடப்பட்ட நோட்டு புத்தகத்தை விசாரணைக்குப்பிறகு திருப்பி அவரிடமே ஒப்படைக்கப்பட்டது. மேலும், அவர் வைத்திருந்த BENCHMARK என்று பச்சை கலரில் எழுதப்பட்ட சாம்பல் நிற துணிப்பை சோதனையிட்டதில், இரண்டாக மடித்து காக்கி டேப் ஒட்டியவாறு சுற்றி

வைக்கப்பட்டிருந்த A4 Size அளவுள்ள இளம் பச்சை நிற அலுவலக கவரில் 500 ரூபாய் தாள்கள் கொண்ட 10 கட்டுகளாக ரூ.4,71,000/- இருந்தது. அந்த பணத்தைபற்றி அவரிடம் விளக்கம் கேட்க உதகமண்டலம் to குன்னூர் சாலையில் அமைந்துள்ள சுவாதி டிரேடர்ஸ் (சென்னை சில்க்ஸ்) கட்டிடத்தின் பரப்பளவு மதிப்பீட்டை குறைத்து சொத்து வரி விதித்ததற்காக கொடுத்த பணம் என்று தெரிவித்தார். அந்த பணம் ரூ.4,71,000/- துணிப்பை மற்றும் கவர் விசாரணைக்காக செயல்முறை நடவடிக்கையில் கைப்பற்றபட்டது. மேலும் Roshan என்று எழுதப்பட்ட புளூ மற்றும் இளம் காக்கி நிற தோள் பை கைப்பற்றப்பட்டது. மேலும் அவர் வைத்திருந்த பரிசு பொருட்கள் மற்றும் ஸ்வீட் பாக்ஸ்கள் விசாரணைக்குப்பிறகு அவரிடமே திருப்பி ஒப்படைக்கப்பட்டது. திடீர் சோதனையின்போது ஆணையாளர் திரு.ஜஹாங்கீர் பாஷா அவர்களிடம் பணம் ரூ.11,70,000/- கைப்பற்றப்பட்டதால், அது சம்மந்தமான ஆவணங்கள் மற்றும் தடயங்கள் ஏதேனும் உள்ளதா என்பதற்காக ஆணையாளர் அறை முழுவதும் சோதனையிடப்பட்டது. கைப்பற்றும்படியான ஆவணங்களோ மற்றும் பொருளோ எதுவும் இல்லை. மேலும் வாகன எண்.TN 54 K 6908-ன் ஓட்டுநர் திரு.ராஜப கவுடா அவர்களை விசாரிக்க, அவர் மாலை சுமார் 19.10 மணியளவில் நகராட்சி ஆணையாளரை மேட்டுப்பாளையம் அழைத்து செல்வதற்காக அவரது குடியிருப்பிற்கு வந்ததாகவும், ஆணையாளர் தனது தோள் பையுடன் வந்து காரின் பின் இருக்கையில் அமர்ந்துக்கொண்டதும், தான் புறப்பட்டு கமர்ஷியல் சாலை வழியாக வந்தபோது அங்கு பிக் ஷாப் கடை அருகே அமைந்துள்ள Syedi Restaurant அருகே காரை நிறுத்தச் சொன்னதன் பேரில் தானும் நிறுத்தியதாகவும், அப்போது அவர் தோள் பையுடன் இறங்கி Syedi Restaurant-க்குள் சென்று Cash Counter-ல் அமர்ந்திருந்த நபரை சந்தித்து பேசியதாகவும், அப்போது அந்த நபர் Cash counter அருகில் இருந்து கவர்களை எடுத்து ஆணையாளரிடம் கொடுத்ததார். அதைவாங்கி ஆணையாளர் அவர்கள் தனது தோள் பையில் வைத்துக்கொண்டதாகவும், பின்னர் அவர் செல்போனில் பேசிக்கொண்டே காரின் அருகில் வந்தபோது, அங்கு இரு சக்கர வாகனத்தில் வந்த நபர்களில் பின்னால் இருந்த நபர் இறங்கி ஒரு இளம் பச்சைநிற

அலுவலக கவரை எடுத்து ஆணையாளரிடம் கொடுத்தார். அதனை ஆணையாளர் அவர்கள் வாங்கி தனது தோள் பையில் வைத்துக்கொண்டு காரின் பின் இருக்கையில் ஏறி அமர்ந்தவுடன் பழைய மாவட்ட கண்காணிப்பாளர் அலுவலகம் வழியாக கோத்தகிரி நோக்கி சேரிங்கிராஸ் அருகே சென்றபோது ஆணையாளர் யாரிடமோ செல்போனில் பேசி தான் வந்துகொண்டிருப்பதாகவும், High Hill Tea அருகில் நிற்குமாறு சொல்லிக்கொண்டு வந்ததாகவும், High Hill Tea அருகில் வந்தவுடன் ஒரு நபர் ஹில்டாப் எதிரே நின்றுக்கொண்டிருந்ததாகவும், ஆணையாளர் காரை நிறுத்தச் சொன்னதன் பேரில் தானும் நிறுத்தியதாகவும், அப்போது அந்த நபர் பின் இருக்கையில் அமர்ந்திருந்த ஆணையாளர் அவர்களிடம் காக்கி நிற கவரை கொடுத்ததாகவும், அவரும் அதனை காரில் இருந்தவாறே வாங்கிக்கொண்டதாகவும், அந்த நபரும் ஆணையாளரிடம் பேசிவிட்டு அங்கிருந்து கிளம்பியவுடன் தான் வாகனத்தை வேகமாக ஓட்டி சென்றதாகவும், சற்று நேரத்தில் தொட்டபெட்டா சந்திப்பில் காரை ஓட்டிக்கொண்டு சென்றபோது தாங்கள் காரை நிறுத்தச்செய்து காரில் பின் இருக்கையில் அமர்ந்திருந்த ஆணையாளர் அவர்களிடம் திடீர் தணிக்கை செய்ய வந்திருப்பதாக தெரிவித்து அவரை விசாரித்து தன்னையும் விசாரித்ததாகவும் சொன்னார். விசாரணையின் போது ஆணையாளர் பணம் கொடுத்தவர்களின் விவரம் தெரிவித்ததன் பேரில் Syedi Restaurant உரிமையாளர்கள் திரு.S.சையது ரகுமான் மற்றும் S.சையது அப்துல் காலித் மற்றும் Limra Garments உரிமையாளர் சிராஜ் என்கிற சாகுல் ஹமீது ஆகியோர்கள் நகராட்சி அலுவலகம் வர தகவல் தெரிவிக்கப்பட்டது. தகவலின் பேரில் Syedi Restaurant உரிமையாளர்கள் திரு.சையது அப்துல் காலித், மற்றும் அவரது சகோதரர் திரு.சையது ரகுமான் இரவு சுமார் 21.00 மணிக்கு நகராட்சி ஆணையாளர் அலுவலகம் வந்து திடீர் ஆய்வுக்குழுவினரிடம் அறிமுகம் செய்து கொண்டனர். திரு.சையது ரகுமான் அவர்களை விசாரித்தபோது உதகமண்டலம் அஞ்சலாந்தரில் பெங்களூர் மெஸ் நடத்திவரும் தங்களது உறவினர் திரு.மொஹம்மது ரஃபி மூலம் நகராட்சி ஆணையாளர் திரு.ஜஹாங்கீர் பாஷா அவர்கள் சுமார் ஒரு மாதமாக பழக்கம் என்றும் தெரிவித்தார்கள். மேலும், திரு.சையது அப்துல் காலித்

என்பவரை விசாரிக்க 06.11.2024-ம் தேதி புதன்கிழமை ஆணையாளர் தன்னை என்னுடைய செல்போன் 9600526603-ற்கு அவருடைய செல்போன் 9444224393-ல் தொடர்பு கொண்டு அவருடைய குடியிருப்பிறகு வரச்சொன்னதாகவும், தான் செல்லாததால், மறுநாள் 07.11.2024-ம் தேதி தன்னை தொடர்பு கொண்டு வரச்சொன்னதன் பேரில் அவரது வீட்டிற்கு சென்றதாகவும், அப்போது அவர் வீட்டிலிருந்து பணக்கற்றைகள் அடங்கிய இரண்டு இளம் பச்சை நிற அலுவலக கவரை, காக்கி நிற டேப்பால் சுற்றி தன்னிடம் கொடுத்து வைத்திருக்கச் சொல்லி, தான் ஊருக்கு செல்லும்போது அதை வாங்கிக்கொள்வதாக தெரிவித்தார் என்றும், மேலும், தான் அதை வாங்கி ரெஸ்டாரண்டில் வைத்திருந்ததாகவும், 09.11.2024-ம் தேதி மாலை சுமார் 19.15 மணிக்கு தனது செல்போனில் தகவல் தெரிவித்துவிட்டு சுமார் 19.30 மணிக்கு ஆணையாளர் கடைக்கு வந்து வாங்கிச் சென்றதாக தெரிவித்தார். பின்னர் தகவலின் பேரில் சுமார் 22.10 மணிக்கு திரு.சாகுல் ஹமிது என்கின்ற சிராஜ் நகராட்சி அலுவலகம் வந்து திடீர் ஆய்வு குழுவினரிடம் அறிமுகம் செய்து கொண்டார். அவரிடம் விசாரிக்க உதகமண்டலம் நகராட்சி ஆணையாளர் திரு.ஜஹாங்கீர் பாஷா அவர்கள் ஏற்கனவே உதகமண்டலம் நகராட்சி அலுவலகத்தில் 2018-ம் வருடம் நகராட்சி ஆணையாளரின் நேர்முக உதவியாளராக இருந்தபோதே தனக்கு தெரியும் என்றும், தற்போது அவர் நகராட்சி ஆணையாளராக வந்தபிறகு அடிக்கடி சந்திப்பது வழக்கம் என்றும், தான் நடத்தி வரும் Limra Garments துணிக்கடையை ஹோட்டலாக மாற்ற ஏற்பாடு செய்ய நகராட்சி ஆணையாளர் திரு.ஜஹாங்கீர் பாஷா அவர்களை கடந்த ஒரு மாத காலமாக கேட்டுக்கொண்டிருப்பதாகவும், அது தொடர்பான நடவடிக்கைகளை அவரே மேற்கொண்டு உதவி செய்வதாகவும் தானும் அது சம்மந்தமாக அடிக்கடி அவரை அவரது தொலைபேசி எண் 9444224393-க்கு எனது தொலைபேசி எண்.9443844276-லிருந்தும் அடிக்கடி தொடர்பு கொண்டும், நேரிலும் சந்தித்து வந்ததாகவும், 09.11.2024-ம் தேதி ஆணையாளர் அவர்கள் தன்னை செல்போனில் சுமார் 18.30 மணிக்கு தொடர்புகொண்டு தனது துணிக்கடையை ஹோட்டலாக மாற்ற ஏற்பாடு செய்து தருவதாகவும், வருவாய் அலுவலரை சந்தித்து வருகின்ற திங்கட்கிழமை மனு அளிக்குமாறு

தெரிவித்தார் என்றும், மேலும் அவர் இன்று சென்னைக்கு செல்வதாகக்கூறி துணிக்கடையை ஹோட்டலாக மாற்ற ரூ.2,50,000/-ஐ தன்னிடம் வந்து கொடுக்குமாறும் தெரிவித்ததாகவும், பின்னர் சுமார் 19.15 மணிக்கு ஆணையாளர் அவர்களை தான் தொடர்பு கொண்டு எந்த இடத்திற்கு வரவேண்டும் என்று கேட்டதற்கு, கோத்தகிரி சாலையில் உள்ள High Hill Tea என்ற இடத்திற்கு பணம் ரூ.2,50,000/-ஐ எடுத்துக்கொண்டு வரச்சொன்னதாகவும், அதன்பேரில் தானும் அவர் கேட்ட பணம் ரூ.2,50,000/-ஐ ஒரு காக்கி நிற கவரில் வைத்து High Hill Tea என்ற இடத்தில் காத்திருந்ததாகவும், அப்போது சுமார் 19.35 மணிக்கு ஆணையாளர் காரில் வந்து நிறுத்தியதாகவும், தானும் அவரை சந்தித்து தன்னிடமிருந்த பணத்துடன் இருந்த கவரை அவரிடம் கொடுத்தவுடன் கார் வேகமாக சென்றுவிட்டதாகவும், தானும் அங்கிருந்து சென்றுவிட்டதாகவும், பின்னர் நகராட்சி அலுவலகத்திலிருந்து தகவல் தெரிவித்ததன் பேரில் தான் நகராட்சி அலுவலகத்திற்கு வந்ததாகவும் தெரிவித்தார். பின்னர் அலுவலகத்திலிருந்த வருவாய் பிரிவில் இளநிலை உதவியாளராக பணிபுரியும் திரு.சரண்குமார் என்பவரிடம் உதகமண்டலம் நகராட்சிக்குட்பட்ட 36 வார்டுகளில் நகராட்சி ஆணையாளர் திரு.ஜஹாங்கீர் பாஷா அவர்கள் நகராட்சி அலுவலகத்தில் நகராட்சி ஆணையாளராக பணியில் சேர்ந்தது முதல் குடியிருப்பு பயன்பாட்டிலிருந்து வரி இனத்திலிருந்து வணிக பயன்பாட்டு வரி இனத்திற்கு மாற்றியமைக்கப்பட்ட கட்டிடங்களின் விவரங்கள் மற்றும் வணிக பயன்பாட்டு இனமாக வரி விதிப்பு செய்த விவரங்கள் குறித்து கேட்க, அவர் வருவாய் பிரிவு A2 இருக்கையில் இருந்த கணினியில் குடியிருப்பு பயன்பாட்டிலிருந்து வணிக பயன்பாடாக மாற்றி அமைத்த 52 கட்டிடங்களின் விவரங்களை எடுத்து ஆஜர் செய்தார் (பக்கம் 1 முதல் 4 வரை) அதில் ஒவ்வொரு பக்கத்திலும் ஆணையாளர், நான் மற்றும் காவல் ஆய்வாளர் சான்றொப்பம் செய்து செயல்முறை நடவடிக்கையில் கைப்பற்றினோம். மேலும் அவரிடம் வணிக பயன்பாட்டில் வரி விதிப்பு செய்த விவரங்கள் குறித்து கேட்க, 41 கட்டிடங்களின் விவரங்களை பதிவிறக்கம் செய்து பிரிண்ட் அவுட் எடுத்து ஆஜர் செய்தார் (பக்கம் 1 முதல் 20 வரை) அதில்

ஒவ்வொரு பக்கத்திலும் ஆணையாளர், நான் மற்றும் காவல் ஆய்வாளர் சான்றொப்பம் செய்து செயல்முறை நடவடிக்கையில் கைப்பற்றினோம். மேலும் அவரிடம் சேரிங்கிராஸ் முதல் கேசினோ சந்திப்பு வரை வாகனம் நிறுத்துவதற்கு ஏலத்தில் விடப்பட்ட விவரங்கள் குறித்த கோப்பினை கேட்க, திரு.சரண்குமார் தன்னுடையை இருக்கையில் இருந்து மேற்படி கோப்பினை எடுத்து வந்து ஆஜர் செய்தார் (பக்கம் 1 முதல் 48 வரை) அதில் ஒவ்வொரு பக்கத்திலும் ஆணையாளர், நான் மற்றும் காவல் ஆய்வாளர் சான்றொப்பம் செய்து செயல்முறை நடவடிக்கையில் கைப்பற்றினோம். பின்னர் அவரிடம் சுவாதி டிரேடர்ஸ் (சென்னை சில்க்ஸ்) குறித்த கோப்பினை கேட்க, அவர் 33-வது வார்டை சேர்ந்த வருவாய் உதவியாளர் திரு.ஸ்டேன்லி பாஸ்கர் என்பவரை தொடர்பு கொண்டு கேட்டபோது அவர் மேற்படி கோப்பானது நகராட்சி ஆணையாளரின் வரவேற்பு அறையின் மேசையில் இருப்பதாக தெரிவித்ததாக கூறி, அந்த கோப்பினை எடுத்து ஆஜர் செய்தார் (பக்கம் 1 முதல் 80 வரை) அதில் ஒவ்வொரு பக்கத்திலும் ஆணையாளர், நான் மற்றும் காவல் ஆய்வாளர் சான்றொப்பம் செய்து செயல்முறை நடவடிக்கையில் கைப்பற்றப்பட்டது. மேலும் திரு.சையது அப்துல் காலித் அவர்கள் பயன்படுத்திய நீல நிற Redme Note12 Pro 5G செல்போனில் 9600526603 எண்ணிற்கு ஆணையாளர் திரு.ஜஹாங்கீர் பாஷா அவர்களின் செல்போன் 9444224393 எண்ணிலிருந்து வந்த அழைப்புகளின் விவரங்களை Screenshot எடுத்து பிரிண்ட் அவுட் எடுத்து ஆணையாளர், நான் மற்றும் காவல் ஆய்வாளர் ஒவ்வொரு பக்கத்திலும் கையொப்பம் செய்து வழக்கின் விசாரணைக்காக கைப்பற்றினோம். திரு.A.ஜஹாங்கீர் பாஷா, திரு.சையது ரகுமான், திரு.சையது அப்துல் காலித், திரு.ராஜப கவுடா மற்றும் திரு.சாகுல் ஹமிது என்கின்ற சிராஜ் ஆகியோர்களை நான் விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்தேன். திடீர் ஆய்வானது 09.11.2024-ம் தேதி 19.45 மணிக்கு ஆரம்பிக்கப்பட்டு 10.11.2024-ம் தேதி 13.00 மணிக்கு முடிக்கப்பட்டது. திடீர் ஆய்வின்போது தயார் செய்த செயல்முறை நடவடிக்கைகள், கைப்பற்றப்பட்ட பணம் ரூ.11,70,000/- மற்றும் ஆவணங்கள், திரு.A.ஜஹாங்கீர் பாஷா, திரு.சையது ரகுமான், திரு.சையது அப்துல் காலித், திரு.ராஜப கவுடா மற்றும் திரு.சாகுல் ஹமிது

என்கின்ற சிராஜ் ஆகியோர்களின் வாக்குமூலங்களை இத்துடன் இணைத்துள்ளேன். உதகமண்டலம் நகராட்சிக்குட்பட்ட 36 வார்டுகளில் நகராட்சி சம்மந்தப்பட்ட பணிகளை மேற்கொள்ள உரிமையாளர்களிடமிருந்து பணம் ரூ.11,70,000/- பெற்ற நகராட்சி ஆணையாளர் திரு.A.ஜஹாங்கீர் பாஷா அவர்கள் மீது உரிய நடவடிக்கை எடுக்க கேட்டுக்கொள்கிறேன். ஒப்பம். K.சீனிவாசன், உதகமண்டலம், 10.11.2024. Submitted: I have received the complaint on 10.11.2024 at about 14.30 hrs from Tr.K.Srinivasan, Special Tahsildar (Elections), District Special Inspection Cell Officer, District Collectorate, Udhagamandalam and registered a case in Nilgiris Vigilance and Anti-Corruption Cr.No.8/2024 u/s. 7 of the Prevention of Corruption Act, 1988 as amended by the Prevention of Corruption (Amendment) Act, 2018 at about 15.00 hrs ஒப்பம் P.Parimaladevi 10.11.2024 Inspector of Police, Vigilance and Anti-Corruption, The Nilgiris. முதல் தகவல் அறிக்கையின் அசல், அசல் புகார், அசல் செயல்முறை நடவடிக்கைகள் மற்றும் படிவம் 91 மூலமாக கைப்பற்றப்பட்ட பணம் ரூ.11,70,500/- ஆகியவற்றை கனம் தலைமை நீதித்துறை நடுவர், தலைமை நீதித்துறை நடுவர் நீதிமன்றம், உதகமண்டலம் அவர்களுக்கு அனுப்பிவைத்தும், இதர நகல்களை சம்மந்தப்பட்ட அதிகாரிகளுக்கு அனுப்பிவைத்தேன்.

10.11.2024
[P. PARIMALADEVI]
INSPECTOR OF POLICE
VIGILANCE AND ANTI CORRUPTION
THE NILGIRIS.